15.10.2024

அ.வ.எண். 529-2017

வாசா.1 - விவேக்

16 மற்றும் 17ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் டிப்ளமோ படித்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணம் என் கைவசம் உள்ளதா என்றால் தேடிப்பார்க்க வேண்டும். அதேபோல் வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணத்தின் அசல் ஆவணமும் எங்கள் வசம் உள்ளதா என்றால் தேடிப்பார்க்க வேண்டும். இந்த 3 அசல் ஆவணங்களையும் நான் இதுநாள் வரை பார்த்ததில்லை. மேற்படி வா.சா.ஆ.2 மற்றம் 3 ஆவணங்களின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் போலியானது என்பது தெரிய வந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யாமல் தவிர்க்கிறேன் என்றால் சரியல்ல. அசல் ஆவணங்கள் என்ன ஆனது பற்றி என் சாட்சியத்திலோ வழக்குரையிலோ நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். சென்னிமலை கவுண்டரின் மகன் நஞ்சப்ப கவுண்டரை எனக்கு தெரியாது. வழக்கில் தாக்கல் செய்துள்ள பத்திரங்களை நான் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் கிரய வாங்கினார்கள் என்று உள்ளதா என்றால் அதில் நஞ்சப்ப கவுண்டர் என்று உள்ளது.

வா.சா.ஆ.2 ஆவணத்தில் சென்னிமலை கவுண்டரின் மகன் நஞ்சையன் என்று உள்ளது என்றால் ஆமாம். நஞ்சப்ப கவுண்டருக்கு, நஞ்சையன் மற்றும் நஞ்சைய கவுண்டர் என்ற மூன்று பெயர்கள் உள்ளது பற்றி வேறு ஆதாரங்கள் என் வசம் உள்ளதா என்றால் இல்லை. 118 நம்பர் காலையில் 8.60 ஏக்கர் பூமி உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் நஞ்சப்ப கவுண்டரும், சுப்பண்ண கவுண்டர் எந்த 4 எல்லைக்கு உட்பட்டு வாங்கி உள்ளார்கள் என்று எனக்கு பார்த்துள்ளேன் ஆனால் தற்போது நினைவில்லை. அதேபால் வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் என்ன 4 எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு நினைவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் கந்தசாமி கவுண்டர் தான் மேற்படி 2 நபர்களிடம் இருந்து கிரயம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். ராமன

கவுண்டரின் மகன் ஆறுமுகத்திற்கு 118 நம்பர் காலையில் பூமி வாங்கியதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணம் கந்தசாமி பெயரில் போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் அதன் மேற்கொண்டு வில்லங்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தனது சகோதரர் ஆறுமுகத்துடன் அவருக்கு உரிமையே இல்லாமல் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் அசல் ஆவணம் என் வசம் தான் உள்ளது, அதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு தனிப்பட்ட காரணம் இல்லை. நஞ்சப்ப கவுண்டர் எந்த காலத்திலும் கந்தசாமி கவுண்டருக்கு கிரயம் கொடுக்கவில்லை, அது போலியான பத்திரம் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.5 ஆவணத்தின் அசல் நான் தாக்கல் செய்யவில்லை, ஆனால் என் வசம் உள்ளது. அதேபோல் வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணத்தின் அசல் ஆவணமும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, ஆனால் அசல் ஆவணம் என் வசம் தான் உள்ளது. உண்மையில் கிரயம் பெற்றிருந்தால் நஞ்சப்ப கவுண்டரின் பெயரில் உள்ள ஆவணங்கள், கந்தசாமி பெயரில் உள்ள ஆவணங்கள் பொது அதிகார பத்திரம் ஆகியவற்றின் அசலை தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. மொத்தமாக 8.60 ஏக்கர் இருந்ததால் தான் அது பிரிக்கப்படாமல் இருந்த காரணத்தாலும் என் தகப்பனார் பெயரிலும் மோசடியாக வருவாய் ஆவணங்களில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. 118 நம்பர் காலை உட்பிரிவு ஆகவில்லை என்றால் சரியல்ல. தற்போது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது ஆனால் அதற்குரிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கிற்கு பின்னிட்டு உட்பிரிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம்.

கந்தசாமி கவுண்டரின் வாரிசுகள் 6 நபர்கள், அவர்களின் பெயர் எனக்கு சரியாக தெரியாது. அவர்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக இல்லை. அதேபோல் திருநாவுக்கரசின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. போலியான ஆவணங்களின் அடிப்படையில் வருவாய்

ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்தது இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் அது எங்களுக்கு உரிமையை தராது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணம் சிட்டா ஆவணம் உட்பிரிவு செய்யப்படாமல் உள்ளது என்றால் ஆமாம். அதே ஆவணத்தில் 1, 2 பிரதிவாதிகளின் பெயரும் உள்ளது என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி இறந்த பின்னிட்டு அவரது வாரிசான 16 மற்றும் 17 பிரதிவாதிகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. அதனால் தான் தற்போதைய பட்டா எதுவும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணம் கந்தசாமி பெயரில் உள்ளது என்றால் ஆமாம். என் தகப்பனார் பழனிச்சாமி பெயரில் இல்லை என்றால் ஆமாம்.

கந்தசாமி பெயரில் உள்ள ஆவணங்கள் போலியானவை என்று 1, 2 பிரதிவாதிகள் எப்போது பிரச்சனை செய்தார்கள் என்றால் 2014 ம் வருடம் நடந்தது, மாதம், தேதி தெரியவில்லை. என் தகப்பனாரை வழக்கு சொத்தில் விவசாயம் செய்ய விடாமல் தங்களுக்கும் பங்கு உள்ளதாக பிரச்சனை செய்தார்கள். அந்த சமயத்தில் என் தகப்பனார் பெயரிலும், அவரது முன்பாத்தியஸ்தர் பெயரிலும் உள்ள பத்திரங்கள் போலியானது என்று என்னுடைய உரிமையை மறுத்தார்களா என்றால் ஆமாம். அதற்கு பின்னிட்டு என் தகப்பனார் அவரது உரிமையை விளம்புகை பரிகாரம் செய்ய கேட்டு வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் ஆமாம். அது தான் இந்த வழக்கு.

வா.சா.ஆ.11 ஆவணம் 1, 2 பிரதிவாதிகள் அவர்களது தகப்பனாருக்கு நஞ்சப்ப கவுண்டருக்கு வாரிசு உரிமை படி வந்த சொத்துக்களை தான் பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 2011 ம் ஆண்டு 1,2 பிரதிவாதிகள் என்னுடைய தகப்பனாருக்கு எதிராக அசல் வழக்கு எண்.450/2011 பழைய வழக்கு எண்.408/2009 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் 2009 ம் ஆண்டே என் தகப்பனாருக்கு 1, 2 பிரதிவாதிகள் அவரது உரிமையை மறுப்பது தெரிய வந்திருந்தும், 2015 ல் தான் தெரிய வந்ததாக பொய்யாக வழக்கெழு மூலம் சொல்லி காலதாமதத்துடன் இந்த வழக்கை தாக்கல

செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி பழைய வழக்கை ரங்கசாமி உடல்நிலை சரியில்லாத காரணத்ததால் அவரால் தொடர்ந்து நடத்த முடியவில்லை என்றால் சரியல்ல. தீர்ப்பு நகலின் ரங்கசாமி என்பதற்கு பதிலாக பழனிச்சாமி என்றே தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

மேற்படி பழைய வழக்கு தள்ளுபடி ஆனதால் பிரதிவாதிகளின் உரிமையை நாங்கள் மறுக்க முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நாங்களோ, என் தகப்பனாரோ, கந்தசாமியோ அதற்கு முன்பு இருந்த நபர்களோ ஆவணங்களின் அடிப்படையிலோ அல்லது நேரடியாகவோ அனுபவ சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. போலியான ஆவணங்களின் அடிப்படையில் வருவாய் ஆவணங்களை மாற்றம் செய்து கந்தாய ரசீது கட்டியுள்ளது, பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அவசிய தரப்பினர்களை சேர்க்காததாலும், வழக்கு காலரவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சரியான மதிப்பீட்டிற்கு செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எங்களுடைய உரிமையை விளம்புகை பரிகாரத்தில் கேட்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல, வழக்கு பற்றியோ, சொத்தை பற்றியோ எனக்கு தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள கூடாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/விவேக்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur